IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

OS. No.166/2018 Date: 11.06.2024

DW1-பரமேஸ்வரி

சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் கடந்த 8 வருடங்களாக பூலாம்பட்டியில் வசிக்கிறேன். நான் கடந்த 8 வருடங்களாக எடப்பாடி BSNL அலுவலகத்தில் உதவி தொலைதொடர்பு அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். வாதியின் மனைவி பூலாம்பட்டியை சேர்ந்தவர் என்றால் எனக்கு தெரியாது. வாதியின் வீட்டிற்கும் என் வீட்டிற்கும் இடையே 2 கீ.மீ தூரம் இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. நான் வாதியிடம் கடனுறுதி சீட்டின் பேரில் கடன் வாங்கியதற்காக அவர் எனக்கு வழக்கறிஞரின் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரியல்ல. நான் அவர் அனுப்பிய 2 அறிவிப்புகளை வாங்க மறுத்து திருப்பிவிட்டேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ல் உள்ள கையெழுத்து மற்றும் ரேகை என்னுடையது இல்லை. வக்காலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். வக்காலத்து மற்றும் வா.சா.ஆ.1 ல் உள்ள கையெழுத்து ஒரே மாதிரியாக தான் உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ல் உள்ள கையெழுத்தை தடயவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி பரிசோதனை அறிக்கை பெற எனக்கு ஆட்சேபனை உண்டா என்றால் இல்லை. நான் பூலாம்பட்டியில் சீலை வியாபாரம் செய்கிறேன் என்றாலும் அதனால் வாதியின் மனைவிக்கும் எனக்கும் அறிமுகம் ஏற்பட்டு நான் வாதியிடம் தாவா கடனை வாங்கினேன் என்றால் சரியல்ல. வாதியிடம் வாங்கிய கடனை ஏமாற்றும் நோக்கத்தில் தான் வாதி அனுப்பிய வழக்கறிஞரின் அறிவிப்பை நான் வாங்கவில்லை என்றால் சரியல்ல. வாதி என்னிடம் நேரில் பலமுறை கடனை திருப்பி கேட்டார் என்றாலும் நான் திருப்பி செலுத்தவில்லை என்பதால் வழக்கறிஞரின் அறிவிப்பு அனுப்புவதாக சொல்லிவிட்டு அனுப்பியதால் நான் அதை தெரிந்து கொண்டு வாங்க மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. வாதியிடம் வாங்கிய கடனை ஏமாற்றுவதற்காக தான் வா.சா.ஆ.1 ல் உள்ள என்னுடைய கையெழுத்தை மறுத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-பரமேஸ்வரி

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.